07.04.2026

O.S.No.43/2011

வா.சா.1.திரு.துரைப்பாண்டி, த.பெ.திரு.கருப்பணன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நாங்கள் தலைகட்டு எத்தனை நபர்கள் உள்ளோம் என்றால் 60, 70 நபர்கள் உள்ளோம். மேற்படி 60, 70 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் 29 தலைக்கட்டுதான் உள்ளோம் என்றாலும் 60, 70 தலைக்கட்டு உள்ளோம் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. வா.சா.1 தனது சாட்சியத்தில் 80 தலைக்கட்டு உள்ளதாக கூறியுள்ளார் என்றால் 70 தலைக்கட்டுதான் இருப்போம்.

2) நாங்கள் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையை சேர்ந்தவர்கள் என்பது சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அசரப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையில் தற்போது யார் அம்பலக்காரர் என்றால் தற்போது அம்பலக்காரர் கிடையாது. கடைசியாக ராஜா வீரணன் என்பவர் அம்பலக்காரராக இருந்தார். வல்லால தேவர் வாரிசுகள் யார் தற்போது உள்ளார்கள் என்றால் கார்த்திகை சாமி, குரு, சக்தி உள்ளார்கள். கிருஷ்ணன் என்பவர் இறந்துவிட்டார். மேற்படி நபர்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் சேர்த்தால் நீதிமன்றத்திற்கு உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேரக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்களிடம் வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பாக கையெழுத்து எதுவும் பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

3) என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில பாரா 5ல் அரசப்ப வெள்ளையன் வகையறாவில் கருப்பணன் மகன் க.வீரணன் உள்ளார் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக அவர் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அவர் வா.சா.1ன் அண்ணன் ஆவார். மேற்படி க.வீரணன் என்பவரையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்துக்கள் கிராமத்திற்கு எப்படி வந்தது என்றால் நான்கு கரையை சேர்ந்த நபர்களும் வாங்கிய சொத்துக்களும் ஆகும். மேற்படி விவரங்கள் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கியது சம்மந்தமான ஆவணங்களில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை டிரஸ்டிகள்தான் கையெழுத்து செய்துள்ளார்கள். நான்கு கரையை சேர்ந்த டிரஸ்டிகள் யார் என்றால் மகாராஜன், தவமணி, க.வீரணன், ம.கருப்பணன் ஆவார்கள். மேற்படி டிரஸ்டி சம்மந்தப்பட்ட விவரங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5) நிரூபண வாக்குமூலத்தில் நான்கு கரைக்காரர்கள் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக அந்த சமயத்தில் நான் பொறுப்பில் இருந்தேனா என்றால் இல்லை. நாங்கள் கழிஞ்ச மலை கருப்பசாமியை கும்பிடுவோர்கள் என்றால் ஆமாம். நான்கு கரையை சேர்ந்தவர்களும் சின்னபுலி அய்யனார் சாமியை கும்பிடுவோம்.

6) நான்கு கரையை சம்மந்தப்பட்ட நபர்களில் வகுத்துபுலியன் பேரன்மார்கள் கரையை சேர்ந்த மகாமுனி அம்பலக்காரர் என்பவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தற்போது மகாமுனி அம்பலக்காரர் என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.18 ஆவணப்படி மீதமுள்ள 30 செண்ட் கிரையம் செய்யப்படாமல் உள்ளது என்பது சம்மந்தமாக ஆவணம் தற்போது யார் வசம் உள்ளது என்றால் மல்காளை என்ற பெரியபுலியன் வைத்துள்ளார். மேற்படி விவரம் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

8) என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ஆவண எண்.2200/2009ன்படி கிரையத் தொகைகளில் நான்கு கரை வாரிசுகளான அரசப்ப வெள்ளையன் வகையறாவிற்காக மதுரை, தல்லாகுளம் கிளை ICICI வங்கியில் 25.04.2009ம் தேதியிட்ட DD No.109238ன் படி K. வீரணன் அவர்களின் பெயரில் ரூ.9,96,937.50 என்று சொல்லப்பட்டுள்ளதில் K. வீரணன் யார் என்றால் வா.சா.1ன் அண்ணன் ஆவார். அதேபோல் கிரையத் தொகைகளில் நான்கு கரை வாரிசுகளான வகுத்துப்புலியன் வகையறாவிற்காக மதுரை, தல்லாகுளம் கிளை ICICI வங்கியில் 25.04.2009ம் தேதியிட்ட DD No.109239ன் படி P.பெரியபுலியன் அவர்களின் பெயரில் ரூ.9,96,937.50 என்று சொல்லப்பட்டுள்ளதில் P.பெரியபுலியன் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் கிரையத் தொகைகளில் நான்கு கரை வாரிசுகளான பெரியபுலியன் வகையறாவிற்காக மதுரை, தல்லாகுளம் கிளை ICICI வங்கியில் 25.04.2009ம் தேதியிட்ட DD No.109240ன் படி தவமணி அவர்களின் பெயரில் ரூ.9,96,937.50 என்று

சொல்லப்பட்டுள்ளதில் தவமணி என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் கிரையத் தொகைகளில் நான்கு கரை வாரிசுகளான தணிக்கன் வகையறாவிற்காக மதுரை, தல்லாகுளம் கிளை ICICI வங்கியில் 25.04.2009ம் தேதியிட்ட DD No.109241ன் படி M. கருப்பணன் அவர்களின் பெயரில் ரூ.9,96,937.50 என்று சொல்லப்பட்டுள்ளதில் M. கருப்பணன் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

9) சின்னபுலி அய்யனார் திருக்கோயில் கட்டிடம் கட்டுவதற்காக நிதி திரட்டப்பட்டதாக சொல்லியுள்ளதில் எந்த வகையில் திரட்டப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் 12 ஏக்கர் 27 செண்ட் இடத்தை விற்பனை செய்து கட்டிட நிதிக்காக கொடுக்கப்பட்டுள்ளது. விற்பனை செய்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. விற்பனை செய்த பத்திரத்தில் சின்னபுலி அய்யனார் திருக்கோயில் கட்டிடம் கட்டுவதற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அனைவரும் பேசிதான் விற்பனை செய்தார்கள்.

10) வா.சா.ஆ.17, வா.சா.ஆ.18 விற்பனை ஆவணங்கள் சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணங்களில் சின்னபுலி அய்யனார் திருக்கோயில் கட்டிடம் கட்டுவதற்காக என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் அதில் உள்ள சங்கதிகள் தெரியாது.

11) 2ம் பிரதிவாதி பவர் பத்திரம் உற்பத்தி செய்துள்ளார் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக அதை நிரூபிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இல்லை. சொத்துக்களை விற்பனை செய்யும்போது கிராம பணத்தில் இருந்து வா.சா.1 ரூ.3 லட்சத்தை எடுத்துக்

கொண்டார் என்று பிரதிவாதி கூறுகிறார் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக பிரதிவாதிகள் கேட்டதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12) நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 6ல் அகிலன் என்பவருக்கு கிராம சொத்தை மோசடியாக கிரையம் கொடுத்து பணத்தை அவர் தனிப்பட்ட முறையில் வைத்துக்கொண்டார் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக எவ்வளவு பணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மோசடியான கிரையம் ஆவணம் என்பதற்கு நான் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

13) நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 7ல் 2ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பான செயல்களின் பெயரில் நடவடிக்கை எடுக்கக்கோரி 30.11.2014 மற்றும் 01.12.2014 தேதியில் அ.வல்லாளப்பட்டி தெற்கு வளவு கிராமத்தில் தீரமானம் போடப்பட்டது என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக மேற்படி தீர்மானத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தீர்மானம் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தணிக்கன் கரையை சேர்ந்த லோகநாதன் என்பவர் கணக்கு பார்த்து வந்துள்ளார் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

14) இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்படுகிறது என்றால் சாமி எல்லாரும் சேர்ந்து கும்பிடவேண்டுமென்று கேட்டுள்ளோம். சின்னபுலி அய்யனார் திருக்கோயில் நான் நிர்வாகியாக இருக்கிறேனா என்றால் இல்லை. டிரஸ்டி பொறுப்பில்தான் நடக்கிறது. 1ம் வாதி இளமாறன், 2ம் வாதி மகேந்திரன், 3ம் வாதி ரகு, 5ம் வாதி தவமணி, 6ம் வாதி முருகேசன்

ஆகியோர்கள் சின்னபுலி அய்யனார் திருக்கோயிலில் பொறுப்பில் உள்ளார்களா என்றால் இல்லை.

15) பெரியபுலியன் பேரன்மார்கள் கரையில் 90 தலைக்கட்டு உள்ளது என்றால் 60 தலைக்கட்டு இருக்கும். மேற்படி கரையை சேர்ந்தவர்கள் இலந்தன்குளம், கோவிலூர், அ.வல்லாளப்பட்டி ஆகிய ஊர்களில் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். இலந்தன்குளம், கோவிலூர், அ.வல்லாளப்பட்டி ஆகிய ஊர்களில் வசித்து வரும் பெரியபுலியன் பேரன்மார்கள் கரையினரை தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வகுத்துப்புலியன் பேரன்மார்கள் கரையை சேர்ந்த நான்கு தலைக்கட்டு நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் கருப்பாத்தான் பேரன்மார்கள் கரையை சேர்ந்தவர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேரக்கவில்லை என்றால் கருப்பாத்தான் பேரன்மார்கள் கரை கிடையாது. கருப்பாத்தான் பேரன்மார்கள் கரை உள்ளது என்றாலும் இந்த வழக்கிற்காக இல்லை என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

16) தணிக்கன் பேரன்மார்கள் கரையில் உள்ள 45 தலைக்கட்டு நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் களிஞ்சமலை கருப்பன் சாமி, வடமுகத்து கருப்பு, ஒத்த மலைச்சி அம்மன் ஆகிய தெய்வங்களை கும்பிடுவர்கள் என்றால் நான்கு கரை நபர்களும் சேர்ந்து தான் சாமி கும்பிடுவோம். களிஞ்ச மலை கருப்ப சாமி அரிட்டாப்பட்டியில் உள்ளது. வடமுகத்து கருப்பு சூரக்குடி வயலில் உள்ளது. ஒத்த மலைச்சி அம்மன் தெற்குவலவு ஓரத்தில் எனது வீட்டின் அருகில் உள்ளது. மேற்படி சாமிகளை 21 கம்பை (சாமியாடி) வைத்து கல்லுமந்தையில் வைத்து கும்பிடுவோம். சின்னபுலி அய்யனார்

கோவியிலும் 21 கம்பை (சாமியாடி) வைத்து சாமி ஆடுவார்கள் என்றாலும் அதில் நாங்கள் கிடையாது என்றாலும் சரிதான். அனைவரும் சேர்ந்துதான் சாமி கும்பிடுவோம். சின்னபுலி அய்யனாருக்கு தெற்குவலவு மந்தை பொட்டலில் வைத்து கும்பிடுவார்கள்.

17) இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். அந்த விசாரணையில் எங்கள் தரப்பினரிடமும் சின்னபுலி அய்யனார் கோவிலுக்கு வரி வாங்க வேண்டுமென்று நாங்கள் கேட்டோமா என்றால் நாங்கள் வரி கொடுத்துக்கொண்டேதான் இருக்கிறோம். நாங்கள் வரி செலுத்தியதற்கான ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நோட்டில் எழுதப்பட்டுள்ளது.

18) நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமே தெரியமால் இதர வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.